# கிறிஸ்தவ ஐக்கியம்

Translated fromf the original article, "Christian Fellowship'

By *Poul Madsen*

**ஐக்கியம்** என்பது அடிப்படையில் நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கொடை, ஓர் ஈவு. இது இப்போதைய ஓர் உண்மை. இது நாம் எதிர்காலத்தில் அடையப்போகிற ஓர் இலக்கல்ல. ஆகையால், அப்போஸ்தலனாகிய யோவான், "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோ டொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்," என்று கூறுகிறார். இது நாம் பரிபூரணராகிவிட்டோம் என்ற காரணத் தால் அல்ல. ஏனென்றால், அவர் தொடர்ந்து, "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்," என்று கூறுகிறார் (1 யோவான் 1:7). இதன் பொருள் என்ன? ஒரு கூட்டம் மக்கள் இருக்கிறார்கள்; அவர்களிடம் நிறையக் குறைபாடுகள் இருக்கின்றன; அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்கள் தொடர்ந்து சுத்திகரிக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது. இப்படியிருந்தாலும் இப்பேர்ப்பட்ட மக்களிடையேகூட பரிபூரணமான ஐக்கியம் ஏற்கெனவே இருக்கிறது என்பதே இதன் பொருள். ஐக்கியம் ஏற்கெனவே பரிசுத்தவான்களிடையே நிறைவாக இருக்கிறது என்ற உண்மையே புதிய ஏற்பாட்டின் ஆரம்பப் புள்ளியாகும்.

இப்படித் துணிந்து கூறுவது நம் அபிப்பிராயங்களை முற்றிலும் தலைகீழாக்கிவிடுகிறது. குறைவுள்ள மக்க ளிடையே பரிபூரணமான ஐக்கியத்தை நம்மால் கற்பனைசெய்து பார்க்க முடியாது; எனவே, ஐக்கியம் என்பதை நடைமுறையில் உள்ள ஓர் உண்மையாகக் கருதாமல், அதை ஒரு சாத்தியமாகவே கருதும் போக்கு நம்மிடம் இருக்கிறது. ஆகையால்தான், ஐக்கியம் என்பது பரத்திலிருந்து நமக்கு வந்த ஒரு கொடை என்று நாம் கருதாமல் அது ஏதோ நம் முயற்சிகளைச் சார்ந்திருக்கிறது என்பதுபோல நினைத்து ஒருமைக்காகக் கடுமையாக உழைம்பதற்கு நாம் ஒருவரையொருவர் வற்புறுத்துகிறோம். எதை ஒருபோதும் சாதிக்க முடியாதோ அதைச் சாதிப்பதற்காக நாம் கடுமையாகத் தொடர்ந்து பிரயா சப்படுவதைவிட நம்மைக் களைப்படையச் செய்யும் வேலை வேறொன்றும் இருக்க முடியாது. இப்படிச் செய்வதால் நமக்கும் மற்றவர்களுக்கும் கஷ்டத்தை உண்டாக்குகிறோம்.

ஆயினும், பரிசுத்தவான்களுக்கிடையேயுள்ள ஐக்கியம் சுவிசேஷத்தின் ஐக்கியம் என்ற ஓர் உயர்ந்த தளத்தில் இருக்கிறது. எனவே, ஐக்கியம் விசுவாசத்தைச் சார்ந்திருக்கிறது. மற்ற எல்லா ஆவிக்குரிய நிஜங்களைப்போல, ஐக்கியத்தை அதின் வேதாகமத்தின் பொருளில் விசுவாசித்தால் மட்டுமே நாம் அதை அனுபவிக்க முடியும். இது நாம் பெற்றுக்கொண்டு, அனுபவித்துமகிழ வேண்டிய ஒரு கொடை, ஓர் ஈவு. இது நாம் எப்போதும் போராடி, பிரயாசப்பட்டு உழைத்துப் பெறுகிற ஓர் இலக்கு அல்ல. தாற்றுக்கோல் கொண்டு குத்துவதுபோல் குத்தி, திரும்பத் திரும்ப பல தடவை வற்புறுத்துவதால் இதை நாம் பெற முடியாது. இது ஓர் எளிமையான நுகம், கனமான பாரம் அல்ல.

### ஐக்கியத்தின் சுபாவம்

ஒருவேளை ஒருவன் ஐக்கியத்தை விசுவாசக் கண்கொண்டு பார்க்கும்போது, ஐக்கியம் என்பது தேவ னிடமிருந்து வருகிற மற்ற எல்லாக் கொடைகளைப்போல பரிபூரணமானது என்று கம் டுகொள்கிறான். உடனே அவன் அதற்கு நன்றியுள்ளவனாக மாறிவிடுகிறான். நன்றியுள்ளவனாக இருப்பவன் எந்தக் கோரிக்கைகளையும் முன்வைக்க மாட்டான். அவன் தான் தகுதியில்லாதவனாயிருந்தும் எல்லாவற்றை யும் கிருபையால் பெற்றிருக்கிறான். ஆகையால், சேவிப்பதற்கும், கொடுப்பதற்கும் அவன் முற்றிலும் ஆயத்தமாயிருக்கிறான். ஐக்கியத்தில் அவன் ஏதாவது குற்றங்களைக் கண்டுபிடித்தாலும்கூட, அவன் புகார்செய்வதில்லை அல்லது அதிருப்தி அடைவதில்லை. ஏனென்றால், தொடர்ந்து சேவிப்பதற்கு அவை அவனுக்கு ஒரு புதிய வாய்ப்பை வழங்குகின்றன. இந்த வகையில் அவன் தன்னையும், ஐக்கியத்தை யும் விசுவாசத்தின் தூய்மையான சூழலில் காத்துக்கொள்ளுகிறான். அவன் ஐக்கியத்தைப்பற்றிய விசு வாசத்தின் வார்த்தைகளைப் பேசுகிறான்; ஐக்கியத்தைப்பற்றிய விசுவாசத்தின் ஜெபத்தை ஜெபிக் கிறான்; ஐக்கியத்தைப்பற்றிய விசுவாசத்தின் பார்வையைத் தக்கவைத்துக்கொள்ளுகிறான். ஐக்கியம் சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் ஜீவிக்கும் விசுவாசமே ஐக்கியத்தின் இருதயமாகும்.

இப்பேர்ப்பட்ட விசுவாசத்தைப் பாதுகாக்க நாம் போராட வேண்டும். இது வெறுமனே நம் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட எண்ணத்தையோ அல்லது எல்லாம் இனிமையாகவே நடக்கும் என்ற நம் குருட்டு மனநிலையைப்பற்றிய காரியமோ அல்ல. மாறாக, இது மெய்யாகவே தேவனுடைய வேலையோடு இடைம்படுகிறது. இது பெரும்பாலும் இல்லாதவைகளை இருக்கிறவைகளைம்போல வரவழைக்கிறது. ஏனென்றால், இது தேவனிடமிருந்தும், அவருடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டும் பேசுகிறது. இதற்கு மாறாக, நாம் ஐக்கியத்தை விசுவாசக் கண்ணில்லாமல் பார்த்தால், இருக்கிறதை மட்டுமே நம்மால் பார்க்க முடியயும், பார்க்கிறோம். இதனால், நாம் பரிபூரணமற்றவர்களாகத்தான் இருக்க முடியும். விசுவாசம் இல்லையென்றால் நாம் ஐக்கியத்துக்குள் கோரிக்கைகளைக் கொம் டு வருவோம். அவைகள் சாதாரணமான கோரிக்கைகள் அல்ல. ஒருபோதும் நிறைவேற்ற முடியாத கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகள் நாம் அடைய வேண்டும் என்று முயற்சிசெய்து கொண்டிருக்கிற ஐக்கியத்தைக் கெடுத்துவிடுகின்றன.

**நன்றியின் ஐக்கியம்**

இது கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகளின், பரிபூரணமற்ற எல்லா மக்களின், ஐக்கியமாக இரும்பதால் அது ஆராதனை, துதி, நன்றி ஆகியவைகளின் ஐக்கியமாகத்தான் இருக்க வேண்டும். விவரிக்க முடியாத அதிசயமான இரட்சிப்பு, சிருபையின் எல்லையற்ற அளவு, விலையேறம்பெற்ற கொடையாகிய நித்திய ஜீவன் ஆகியவைகள் நம்மை நிரப்புகின்றன. எனவே, நாம் நம் பிதாவாகிய தேவனையும், நம் இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசுவையும் ஆராதிக்கிறோம், துதிக்கிறோம், ஸ்தோத்திரிக்கிறோம். நாம் அவரைத் தெரிந்துகொள்ளவில்லை; மாறாக அவரே நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். எனவே, நம் இரட்சிப்பு நம் சித்தத்தையோ அல்லது நம் நோக்கத்தையோ சார்ந்திராமல் அவருடைய சித்தத்தை அல்லது அவருடைய நோக்கத்தைச் சார்ந்திருக்கிறது என்ற உம் மையாகிய உறுதியான பாறையின் மேல் நாம் நிற்கிறோம். ஆகையால், இது அசைக்க முடியாதது. நாம் ஒன்றாகச் சேர்ந்து களிப்புடன் நம் நன்றியைத் தெரிவிப்பதையும், அவருடைய மகிமையான பெயரையும் துதிப்பதைத்தவிர வேறு ஏதாவது செய்ய முடியுமா?

விசுவாசக் கண்களைக்கொண்டு நாம் எதிர்காலத்தைப் பார்க்கும்போது. நாம் புதிய வானங்களையும் புதிய பூமியையும் பார்க்கிறோம். அங்கு நீதி ஆட்சிசெய்கிறது; அங்கு நாம் நித்தியத்திற்கும் அவருடன் ஆசாரியர்களின் இராஜ்ஜியமாக இருக்கிறோம். இந்தக் காட்சியைக் காணும்போது நாம் ஏறக்குறைய மயக்கம் அடைகிறோம். தாம் சிந்திய இரத்தத்தின்மூலம் நமக்காக இப்பேர்ப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தந்த அவரை நாம் ஒன்றுசேர்ந்து ஆராதிப்பதைத்தவிர வேறு ஏதாவது செய்ய முடியுமா? நம் ஒவ்வொருவருடைய கரங்களிலும் வேதாகமம் இருக்கிறது; அதிலிருந்து நம்மைச் சந்திக்க ஒளியும், ஜீவனும் பாய்ந்துவருகின்றன; நாம் தேவனுடைய அப்பட்டமான சத்தியத்தைக் கேட்கிறோம். அவர் நமக்கும் பேசுகிறார், அவர் தம்முடைய எண்ணங்களை நமக்கு வெளிப்படுத்துகிறார், அவர் தம் வழிகளை நமக்குக் காண்பிக்கிறார். நாம் இதுவரை பேசப்பட்ட வார்த்தைகளிலேயே மிக அழகான வார்த்தைகளைக் கேட்கிறோம்; நாம் இதுவரை வாழ்ந்த மனிதர்களிலேயே மிகச் சிறந்த மனிதர்களைப் பார்க்கிறோம்; நாம் விடுதலையாக்கம்பட்டு மிகச் சாதாரணமானதும், இரண்டாந்தரமுமான காரியங்களுக்குமேலாக உயர்த்தப்பட்டு தேவனுடைய மாபெரும் எண்ணங்களுக்குள் கொண்டு செல்லப்படுகிறோம். தேவனிடமிருந்தே இந்தச் செல்வங்களெல்லாம் நம்மைச் சந்திக்கப் பாய்ந்தோடி வருகின்றன. எனவே, நாம் அவரைத் தவிர மற்றெல்லாவற்றையும், மற்றெல்லாரையும் மறந்துவிட்டு, நாமெல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே துதியின் பாடலையும், ஆராதனையின் பாடலையும் ஏறெடுப்பதைத்தவிர வேறென்ன செய்ய முடியும்? நாம் அவரிடத்தில் ஜெபித்தால் அவர் நமக்கு செவிகொடுப்பார். இது புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கும் பெரிய காரியம். இது நாம் பெற்ற அற்புதமான அநுகூலங்களுக்காக நம்மை ஒன்றாகச் சேர்த்து இசைவாக்கி அவருக்கு நன்றிகூற நடத்துகிறது, ஒன்றாக வைத்துக் காத்துக்கொள்ளுகிறது. இந்த அற்புதமான அநுகூலங்களுக்குத் தொடக்கமோ அல்லது முடிவோ இல்லாததுபோலத் தோன்றுகிறது.

**சேவையின் ஐக்கியம்**

நன்றியுள்ள மக்கள் தேவனுக்குப் பக்தியுடன் சேவைசெய்வதின்மூலம் தங்கள் நன்றியைக் காண்பிக்கிறார்கள், காண்பிக்க ஏங்குகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அவருக்குக் கடன்பட்டிருக்கிறார்கள். ஆகையால், சபையைக் கட்டியெழுப்புவதற்காகவும், இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படுவதற்

காகவும் பரிந்துபேசும் வேலையிலும், சாட்சிசொல்லும் வேலையிலும், அவசியமான வேறு பல வேலைகளிலும், மன்னிக்கப்பட்ட பாவிகளாகிய நாம் சேர்ந்து உழைக்கிறோம். சேர்ந்து சேவிப்பதைத்தவிர வேறு எதன்மூலமாகவும் ஐக்கியம் நமக்கு நிஜமாக மாறுவதில்லை. சில வேளைகளில் இது "சேர்ந்து போராடுதல்" என்றழைக்கம்படுகிறது. கஷ்டங்கள் வரும்போது இப்படி சேர்ந்து போராடுவதுபோல் தோன்றுகிறது. பின்பு, ஐக்கியம் எவ்வளவு முக்கியம் என்றால் அது சேர்ந்து நிற்பதாகும், சேர்ந்து உயர்த்துவதாகும், சேர்ந்து சுமப்பதாகும், விசுவாசத்தின் ஆவியில் எப்போதும் விசுவாசத்தின் வார்த்தைகளைப் பேசுவதின்மூலம் ஒருவரையொவருவர் உற்சாகப்படுத்துவதாகும். என்னே சிலாக்கியம்!

சில நேரங்களில், அது ஒரு சிலாக்கியத்தைப்போல் *தோன்றவில்லை*யென்றால் அதற்கும் பல காரணங்கள் இருக்கக்கூடும். ஒரு காரணம் என்னவென்றால் ஐக்கியமும், ஒத்துழைப்பும் வேண்டுமென்றால் அதற்கு நாம் எப்போதும் ஒரு விலைக்கிரயம் செலுத்த வேண்டும். இது ஓர் உண்மை. யுத்தத்தின் மும்முரத்தில் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. மன்னிக்கப்பட்ட பாவிகள் என்ற முறையில், நாம் மற்றவர்கள்மேல் கோரிக்கைகளை வைக்க முடியாது. மாறாக நன்றியோடும், விசுவாசத்தோடும் நாம் ஒருவர் பாரங்களை ஒருவர் சுமக்க வேண்டும். முடிவற்ற, செயல்முறைக்கு ஒத்துவராத விவாதங்களில் நேரத்தைச் செலவழிம்பதைவிட, ஒன்றாகச் சேர்ந்து ஏதோவொன்றைச் சாதிப்பது மிகச் சிறந்தது என்று சேவையின் இந்த ஐக்கியத்தில் நாம் அனுபவிக்கிறோம். எந்தத் திசையில் நாம் இயங்க வேண்டும் என்று நமக்குத் தெரிந்தவுடன், எல்லாத் தடைகளும் மறைய வேண்டும் என்று காத்திருப்பதைவிட, விசுவாசத்தோடு ஒன்றாகச் சேர்ந்து இயங்குவது சிறந்தது என்று நாம் காண்கிறோம். விசுவாசம் என்ற சூளையில் நம் இருதயங்கள் ஒன்றாக உருகிஇளக்கப்பட்டிருப்பதால், எங்கே வழி யில்லையோ அங்கு தேவன் நமக்காக ஒரு வழியைத் திறப்பார் என்று சேர்ந்த ஐக்கியத்தில் நாம் காண்கிறோம்.

**சிலுவையின் ஐக்கியம்**

இவையெல்லாம் உண்மையிலே கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வருகிற ஐக்கியம்; நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கையில், இது நம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, இறுதியில் சிலுவை சுமப்பவர்களாக மாற்றிவிடுகிறது. மற்றவர்கள் நம் சுமைகளைச் சுமக்க வேண்டும் என்று நாம் கோராமல், மற்றவர்கள் சுமக்க வேண்டிய சுமைகளில் அவர்களுக்குத் தோள்கொடுக்க நாம் அவர்கள் பக்கம் விரைகிறோம் என்பதே இதன் பொருள். அவர்களுடைய பாரம் நம்முடைய பாரம். நாம் நமக்காக வாழவில்லை; நாம் ஒருவரையொருவர் சேவிக்கிறோம். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்பதை நாம் அறிந்து, நாம் இதை மகிழ்ச்சியுடன் செய்கிறோம். சுவிசேஷ ஐக்கியம் எப்படிப்பட்டதென்றால் இதில் யாரும் முதல் இடத்துக்காகச் சண்டைபோடுவதில்லை; இதில் யாரும் மற்றவர்களைவிடத் தான் உயர்ந்தவன் அல்லது பெரியவன் என்பதில் சந்தோஷமோ அல்லது மகிமையோ அடைவதில்லை. இங்கு, பலவான்கள் தங்கள் சொந்த உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தங்கள் பலத்தைப் பயன்படுத்தாமல், பலவீனமானவர்களுக்கு உதவிசெய்யவே பயன்படுத்துகிறார்கள். இதில் இருப்பவர்கள் "தன் ஜீவனைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; இயேசுவினிமித்தம் அதை இழந்துபோகிறவன் அதைக் காத்துக்கொள்கிறான்" என்பதை அறிந்து அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரியதைத் தேடாமல், மற்றவர்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

**ஐக்கியத்தைப்பற்றிய தவறான கருத்துக்கள்**

சுவிசேஷத்தின் ஐக்கியமே தேவனுடைய வல்லமை. ஆயினும், ஐக்கியத்தை ஒரு கோரிக்கையாக மாற்றிவிட்டால் அது சட்டத்தையும், எழுத்தையும் கொண்டுவரும். அப்போது அது பாவத்தின் வல்லமையாக மாறிவிடுகிறது. இது நம் அருகே மூலையிலே ஒளிந்துகொண்டிருக்கிற ஆபத்து; நல்லெண்ணம் கொண்ட அநேகக் கிறிஸ்தவர்கள் இந்த ஆபத்துக்கு ஆளாகிவிட்டார்கள். புதிய ஏற்பாட்டு ஐக்கியத்தின் மேல் பேராவல் கொண்டவர்கள் மிகவும் வித்தியாசமான ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வெளித்தோற்றத்தின்படி அது வேதத்துக்குரியதாகத் தோன்றுகிறது. பல வேளைகளில் அப்படி வேதத்துக்குரியதாகக்கூடத் தோன்றவில்லை. அப்படியேயிருந்தாலும் அது உள்ளாக அடிமைத்தனத்தையும், பயத்தையுமே உற்பத்திசெய்கிறது. இது அடிக்கடி நிகழ்கிறது.

'புதிய ஏற்பாட்டு சபை' என்ற சொற்றொடரிலேயே ஆபத்து எழுகிறது. இதன் பொருள் என்ன? இந்தத் தலைப்பில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களை நாம் வாசித்தால் அல்லது இந்தப் பதத்தைப் பயன்படுத்து

பவர்களைக் கேட்டால், நாம் பொதுவாக ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்கிறோம். அவர்கள் புதிய ஏற்பாட்டு சபைகள் என்று கூறும்போது அவர்கள் ஓர் அமைப்புமுறையை அல்லது ஒரு நிறுவனத்தையே குறிக்கிறார்கள். ஒரு புதிய ஏற்பாட்டு சபை இருக்க வேண்டுமானால் அதற்குமுன் அங்கு மூப்பர்கள் இருக்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்துகிறார்கள்; புதிய ஏற்பாட்டு சபைக்கு ஒரு நகரம்தான் தளம், ஒரு நகரம்தான் அதில் எல்லை என்று வேறு சிலர் வலியுறுத்துகிறார்கள்; 'ஆவியானவரின் கொடைகள்' கிரியை செய்ய வேண்டும் என்று இன்னும் வேறு சிலர் வலியுறுத்துகிறார்கள். (உண்மையில் அவர்கள் குறிப்பிட்ட ஒரு சில கொடைகளைப்பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள்). இவையெல்லாம் ஏறக்குறைய சரியாக இருக்கக்கூடும். ஆனாலும், இந்தச் சட்டங்களை மட்டும் வெறுமனே பின்பற்றுவதால் விரும்புகிற விளைவு ஒருபோதும் ஏற்பட்டுவிடாது என்பதற்கு அனுபவத்தில் தெளிவான நிரூபணம் இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட அணுகுமுறையினால் என்ன ஏற்படுகிறது தெரியுமா? சில இடங்களில் அடிமைத்தனம் ஏற்படுகிறது. சில இடங்களில் அது அவர்களை அப்பட்டமான தவறுக்கு நடத்துகிறது. நாம் 'ஏதோவொன்று' என்று நினைக்க ஆரம்பித்தால், அதாவது நம்மை ஒரு பொருட்டென்று கருத ஆரம்பித்தால், பெருமைக்கு (ஆவிக்குரிய வகை) அதிகமான இடம் கொடுத்துவிடுகிறோம். இது பிசாசு காலூன்ற அவனுக்கு இடம் கொடுக்கிறது. அதை அவன் வேகமாகத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறான். வேறு சில இடங்களில் சிலர் தங்களை மற்றவர்களிடமிருந்துப் பிரித்துத் தனித்திருக்கும் நிலைமையையும், சுயதிருப்தியையும் ஏற்படுத்துகின்றன; இதற்கும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிற அன்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இன்றும் வேறு சில இடங்களில் ஒரு பரஸ்பர சந்தேகம் எழுகிறது; அது எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே செயல்படுகிற செயல்பாட்டையும், சுதந்தரமாக முதல் அடி எடுத்துவைத்து இயங்குகிற உரிமையையும் முடக்கி விடுகிறது. இதன் விளைவாகத் தேக்கமும், பக்கவாதமும் ஏற்படுகின்றன. இந்த சோகங்களுக்கெல்லாம் காரணம் என்ன?

இது இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன? அடிக்கடி என்ன நடக்கிறது? மக்கள் விசுவாசம், கிருபை என்னும் மண்டலத்தைவிட்டு வெளியே சென்று, எல்லையைத் தாண்டி சட்டத்துக்குள்ளும் எழுத்துக்குள்ளும் சென்று, சுயமுயற்சி என்றும் தவறுக்குள் விழுந்துவிடுவதே இதற்குப் பெரும்பாலும் காரணம். புதிய ஏற்பாட்டு ஐக்கியம் தேவனுடைய நன்மைத்தனத்தின் *விளைவு*தானே தவிர, அதற்கான *நிபந்தனை* அல்ல என்பதை மனிதர்கள் மறந்துவிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உண்மையான ஐக்கியம் என்பது தேவனிடமிருந்து நமக்குக் கிடைத்த ஒரு கொடை. ஓர் ஈவு; தகுதியேயில்லாத நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இது நிச்சயமாக ஒரு வெகுமதியோ. பரிசோ, இல்லை. இதை இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக் கூறவேண்டுமானால், "ஒரு புதிய ஏற்பாட்டு சபையை" உருவாக்குவதின்மூலம் தெய்வீக ஆசீர்வாதம் மழைபோல் பெய்யும் என்று நினைத்தால் அவர்கள் சட்டத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ஆபத்துக்குள் விழுந்துவிடுகிறார்கள். இது ஓர் அவலநிலையை மட்டுமே கொண்டுவரும். நாம் தேவனுடைய ஆசீர்வாதத்துக்குத் தகுதியுடையவர்கள் என்பதுபோல் நாம் நினைக்கிறோம்! நாம் தேவனிடமிருந்து கிருபையின் கொடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுபோல் நாம் நினைக்கிறோம்!

ஏராளமான கிறிஸ்தவர்கள் இந்த இக்கட்டான நிலையில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய மாபெரும் இரக்கம் மட்டுமே அவர்களை இந்த நிலைமையிலிருந்து வெளியே கொண்டுவர முடியும். பகட்டான ஏதோவொன்றை உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஒரு 'புதிய ஏற்பாட்டு சபையை' சிருஷ்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எத்தனையோபேர் கூடிவருகிறார்கள். ஆனால், அவர்களோ ஏமாற்றத்தைத்தான் சந்திக்கிறார்கள். புதிய ஏற்பாட்டோடு தொடர்புடைய மற்ற எல்லாவற்றையும் போல "புதிய ஏற்பாட்டு ஐக்கியமும்" முதன்முதலாக *சுவிசேஷத்துக்குரியதாகும்,* அதாவது *தகுதியில்லாதவர்களுக்குத் தேவனிடமிருந்து வருகிற ஒரு கொடை,* ஓர் ஈவு. இப்பேர்ப்பட்ட கொடை முற்றிலும் நிறைவானது, இது கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையால் மட்டுமே முற்றிலும் சொந்தமாக்கப்படுகிறது. இதை சிருஷ்டிப்பதற்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால், ஐக்கியம் மற்றவர்களுடையதைவிட நம்முடையது என்று நாம் ஒருபோதும் மேன்மைபாராட்டமுடியாது. இந்த சத்தியம் ஒருமுறை நமக்குள் பதிந்துவிட்டால், ஐக்கியம் என்பது நாம் அடைய முயற்சிசெய்கிற ஓர் இலக்காகவோ அல்லது நாம் கட்டியெழுப்ப முயற்சிசெய்கிற ஒரு கூட்டுக்குழுமமாகவோ மாறாது. மாறா, அது கிறிஸ்துவை இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொள்கையில் நாம் முழு அளவில் அனுபவிக்கிற ஓர் அற்புதமான நிஜமாக மாறு

கிறது. எனவே, ஐக்கியத்தில் ஒருவரையொருவர் இறுமாப்புடன் கட்டுப்படுத்துதல் சம்பந்தப்படவில்லை என்பதை நாம் பாராட்டுகிறோம். நம் ஆளுமையை நாம் விட்டுவிடுகிறோம் என்பதல்ல இதன் பொருள். இது மற்றொருவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மூக்கைக் துளைக்கிற ஆரோக்கியமற்ற தலையீடு அல்ல. அது முற்றிலும் ஆரோக்கியமானது, பரிசுத்தமானது. மனிதர்களுக்குப் பயப்படும் பயத்துக்குப் பதிலாக, தேவனுக்குப் பயப்படும் பயம் கட்டுப்படுத்துகிற ஆற்றலாக இருக்கும். ஒவ்வொரு தனி நபரும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பதுபோல அவர்களாகவே இருக்கலாம். அவர்கள் சுதந்தரவாளிகளாக இருப்பதுபோல மற்றவர்கள் கிறிஸ்து இயேசுவில் என்னவாக இருக்கிறார்களோ அப்படியே இருப் பதற்கு அவன் அவர்களையும் அனுமதிக்கலாம். தேவனுக்காக நாம் வாழும் வாழ்க்கையிலும், அவருக் காக நாம் செய்யும் சேவையிலும் ஒரு அடிகூட நாம் முன்னோக்கி வைப்பதற்கு சட்டத்தால் நமக்கு உதவிசெய்ய முடியாது. அதுபோல, நாம் நம் ஐக்கியத்தை அபிவிருத்திசெய்ய உதவுவதற்கும் சட்டத் தால் ஒன்றும் செய்ய முடியாது. சிலர் தங்கள் கோரிக்கைகளாலும், சட்டதிட்டங்களாலும், புதிய ஏற் பாட்டு சபைகளைம்பற்றி எழுதம்பட்ட புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டும் ஐக்கியங்களை ஸ்தா பிக்க நினைக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு செய்யும்போது தேவனுடைய பிள்ளைகளுடைய இருதயத் தையும், கவனத்தையும் அவர்களுடைய கர்த்தரிடமிருந்தும், இரட்சகரிடமிருந்தும் பிரித்து 'சபைக்கு' நேராகவும், அதன்பின் தங்களுக்கு நேராகவும் திருப்பிவிடுகிறார்கள் என்பதை அவர்கள் உணரத் தவறி விடுகிறார்கள். கிறிஸ்து ஆல்பாவாகவும் ஒமேகாவாகவும் இல்லையென்றால் அது ஒரு *சாதாரணமான* விஷயம் இல்லை. அதுதான் *எல்லாம்.* அப்போது காரியங்கள் தவறான பாதையில் போய்விடுகின்றன. இதை மாற்ற முடியாது. சபை என்பது தேவன் நமக்குத் தந்த ஓர் ஈவு, ஒரு கொடை, என்பதற்குப்பதிலாக அதை நாம் நம்முடைய கொடையாக, ஈவாக தேவனுக்கு வழுங்கும்போது நாம் ஆவிக்குரிய நிஜத்தி லிருந்து விலகி தூரமாகச் சென்றுவிடுகிறோம். அதற்குப்பதிலாக நாம் *அவரை* நோக்கிப்பார்க்கும் போது, *அவரிடத்தில்* கூடிவரும்போது, *அவரைச்* சேவிக்கும்போது, *அவர்மேல்* கவனத்தைக் குவிக் கும்போது, சுவிசேஷம் இரட்சிப்புக்கென்று தேவனுடைய வல்லமைாகக் கிரியைசெய்கிறது, ஐக்கியம் தானாகவே வளர்கிறது. விசுவாசத்தின் கிரியைகளைச் செய்ய வேண்டும் என்ற ஆசை கடமை உணர்ச் சியினால் அல்ல, மாறாக கிறிஸ்து ஜீவனுள்ள முறையில் அவனுக்கு வாழ்பவராக இருப்ப தால் ஒவ்வொருவருடைய ஆசையும் கிளர்ந்தெழுகிறது. மற்ற எல்லா விஷயங்களிலும் இருப்பதுபோல, ஐக்கியத்தில் சுவிசேஷம் தேவனுடைய வல்லமை, சட்டம் பாவத்தின் வல்லமை.

## புதிய ஏற்பாட்டு சபை

புதிய ஏற்பாட்டு சபையைப்பற்றிய தரிசனம் என்ற கருத்தை எந்த வகையான ஆவியோடு நாம் அணுகு கிறோம் என்பது மிகவும் முக்கியம். இது உண்மையாகவே மிகப் பெரியது, மிக மகிமையானது, மிகவும் அதிசயிக்கத்தக்கது என்று தாழ்மையான உணர்வோடு நாம் பேச மட்டுமே முடியும். இதில் நாம் ஒருபோதும் கைதேர்ந்தவர்களாகிவிட முடியாது அல்லது இதைப்பற்றிய எல்லாவற்றையும் நாம் அறிந்து விடவும் முடியாது. இந்த வகையில் பாதிக்கப்படாமல் எபேசியர் நிருபத்தை ஒருவரும் நிச்சயமாக சரி யாக வாசிக்க முடியாது. ஒரு தெய்வீகக் குறிக்கோள் இருப்பதையும், அதில் நித்தியத்திலிருந்து நித் தியம்வரை தேவனுடைய எண்ணத்தில் சபைக்கு ஒரு மைய இடம் இருப்பதையும் இந்த நிருபத் தில் பவுல்தான் முதன்முதலாக வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். சபையானது நித்தியம் என்ற ஜீவிக் கும் மண்டலத்திலிருந்து வெளிவந்து காலம் என்ற மண்டலத்திலும், சகல சிருஷ்டிப்புக்கும் தேவ னுடைய தலையாய எண்ணம் என்ற வகையில் தேசங்களின் நடுவிலும் கிரியைசெய்கிறது. சபையில் தேவன் தம்மைத் தூதர்களுக்கும், பிசாசுகளுக்கும் உள்ள காணமுடியாத மண்டலத்துக்கு வெளிப்படுத்து கிறார். ஒருநாள் அவர் அதை காணத்தக்க உலகத்துக்கு வெளிப்படுத்தும்போது, அது சிருஷ்டிப்பின் இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருப்பதுபோல் இருக்கும்; அவர்கள் அவரோடும், அவ ருடைய சித்தத்தோடும் முற்றிலும் ஒன்றாக இருந்து, நித்தியத்திற்கும் அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வார்கள்.

அதில் ஒரு சிறிதளவையாவது யாரால் உணர முடியும்? தனக்குத் தகுதியில்லை என்ற தாளாத உணர்வுடன் முகங்குப்புற விழாமல், இப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான அழைப்பிற்கு தகுதியற்ற வர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை இல்லாமல், இப்பேர்ப்பட்ட எண்ணத்திற்கு தன் இருதயத்தை யாரால் திறக்கமுடியும்? உண்மையாகவே சபை என்பது கிருபையின்மேல் கிருபையாகும். இது காலத்துக்குமுன்பே அல்லது எந்த மனிதனும் அதைப்பற்றி நினைப்பதற்குமுன்பே அவருடைய

இருதயத்தில் பிறந்தது; இது முழுவதுமாகவும், முற்றிலுமாகவும் சர்வ வல்லமையுள்ள தேவன் மேலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது, அவரே அதின் அஸ்திபாரம்.

இப்பேர்ப்பட்ட கருத்துடன் பவுல் சபைக்குக் கூறும் அறிவுரைகள், புத்திமதிகள், உற்சாகமூட்டுதல்கள் உண்மையான சுவிசேஷத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன; அவை எழுத்தையும் சட்டத்தையும் தெரிவிக்கவில்லை. அவை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கின்றன. இப்போது நாம் மனிதனையும் மனுஷியையும்பற்றிய, வாலிபனையும் வயோதிகனையும்பற்றிய உற்சாகமூட்டுதல்களைம் புரிந்துகொள்கிறோம். அவை நம் ஒவ்வொருவரையும் பெரிதும் நித்திய மதிப்புமுடைய சபையின் சூழலில் நமக்குரிய இடத்தில் வைத்திருப்பதால் நாம் மனமகிழ்ச்சியோடு மற்றவர்களை அவர்களுடைய படைக்கும் ஆற்றலுடைய, விடுதலையாக்குகிற வல்லமையில் ஏற்றுக்கொள்கிறோம். பவுல் இந்தத் தரிசனத்தால் எந்த அளவுக்கு ஆட்கொள்ளப்பட்டிருந்தார் என்றால், "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக...நிறைவேற்றுவதற்கு," அவர் சித்தமாயிருந்தார் (கொலோ 1:24).

ஐக்கியம் ஆவியானவரால் பிறந்தது. கிறிஸ்துவுக்குள்ளான மனிதர்களின் இப்பேர்ப்பட்ட ஐக்கியத்தில் சம்பந்தப்பட்டுள்ள தெய்வீக மேன்மையின் நிறைவின்மேல், கிருபையால், நம்மால் கொஞ்சம் வெளிச்சம்வீச முடியமானால் இரட்சிப்பையும், சபையையும்பற்றிய நம் கண்ணோட்டம் முற்றிலும் மாறிவிடும்; இரட்சிப்பு என்றால் என்னவென்று நாம் பொதுவாகப் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் இரட்சிப்பு என்பது அதைவிட மிகப் பெரியது என்று நாம் உணர்ந்துகொள்வோம். அதுபோல சபை என்பது நாம் இதுவரை புரிந்துகொண்டிருப்பதைவிட மிகவும் மகிமையானது என்றும் நாம் உணர்ந்துகொள்வோம். அப்போது ஆவிக்குரிய சுய-மையத் தன்மையும், தன்னலமும் மறைந்துவிட வேண்டும்; சூரியனுக்குமுன் பனி கறைவதுபோல் ஐக்கியத்திற்காக நாம் முன்வைக்கும் சுயநலமான கோரிக்கைகளும் மறைந்துவிட வேண்டும். எனவே, ஐக்கியத்தில் குறைகள் இருந்தாலுங்கூட (நடபடிகளில் இந்தக் குறைகள் சபைகளில் மிக விரைவில் அப்பட்டமாகத் தோன்றின)) அது வெளியே இருப்பவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கிறது, அது மனிதர்கள் கிறிஸ்துவுக்குள் உண்மையாக எப்படி இசைந்த வாழ்க்கை வாழ முடியும் என்றும் காண்பிக்கிறது. மனிதர்கள் 'நேர்த்தியான மனிதர்களாகவும்' பெண்கள் 'நேர்த்தியான பெண்களாகவும்' பார்க்கப்படுகிறார்கள். மனித வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் உண்டு. நம் சிருஷ்கரும், மீட்பருமாகிய நம் தேவனின் இந்தக் குறிக்கோள் நிஜமாகும்போது ஒவ்வொரு தனிநபரும் அந்த நிஜத்தில், செயலாக்கத்தில் உண்மையான சுபிட்சமாக வாழ்வதை நாம் பார்க்கிறோம். சுவிசேஷம் மெய்யான மனிதர்களையும், மெய்யான மனுஷிகளையும், மெய்யான வாலிபர்களையும் வயோதிகர்களையும் உருவாக்குகிறது. அது அவர்களை ஜீவ சேர்க்கையில் ஒன்றாகச் சேர்க்கிறது. அது அவர்களை எளிமையான நேரங்களின் வழியாகவும், கஷ்டமான நேரங்களின் வழியாகவும் அவர்களைக் கொண்டுசென்று, பொய்களும் மாயையும் நிறைந்த தற்போதைய நாகரிகத்தின் மத்தியில் அவர்களை தேவனுடைய உண்மையான உலகத்தின் புறங்காவல் அரணாக மாற்றுகிறது.

இது கவர்ச்சிகரமானது இல்லையென்றால், வேறு எது கவர்ச்சிகரமானது என்று எனக்குத் தெரியாது. இதற்காக, இதற்கு நாம் எல்லாவற்றையும் கொடுப்பதற்கு இது தகுதியானதில்லையா? அப்படி இதற்குத் தகுதியில்லையென்றால் வேறு எதுதான் தகுதியுடையது என்று எனக்குத் தெரியாது. "என் ஆற்றல், சக்தி அனைத்தையும் எதற்குச் செலவழிக்க வேண்டும்," என்று எனக்குத் தெரியவில்லை அல்லது சந்தேகமாயிருக்கிறது என்று எந்த சகோதரனும், சகோதரியும் சொல்லத் தேவையில்லை. இதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். தான் முதலாவது—*முதலாவது*—எதைத் தேட வேண்டும் என்பதை யாரும் அறியாமல் இருக்க வேண்டிய தேவையில்லை. சுவிசேஷம் எல்லாக் காரியங்களையும் நமக்காக அதினதின் இடத்தில் சரியாக வைத்திருக்கிறது, எல்லாவற்றையும் தெய்வீகக் கண்ணோட்டத்தில் பார்க்கச் செய்திருக்கிறது, சிறிய பெரிய எல்லாவற்றையும் பார்க்கச் செய்திருக்கிறது. எனவே, தேவனுடைய இரட்சிப்பு என்ற அற்புதமான, எழுச்சியான திட்டத்தில் சபை வகிக்கிற மைய இடத்தை நாம் பாராட்டுகிறோம்.